# Eastern University, Sri Lanka
# Faculty of Commerce and Management
# (External Degree)
# Part I Examination in BBA 2007/2008
# (Proper/ Repeat) May/ June 2011
# EXB 201 Macro Economics

LIBRARY
30 DEC 2011
Eastern University, Sri Lanka.

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம்:-03 மணித்தியாலம்

---

1. (a). பேரினப் பொருளியல் கோட்பாடானது எவ்வெவ் விடயங்களை ஆராய்கிறது?
(04 புள்ளிகள்)

(b). பேரினப் பொருளியல் கொள்கையின் பிரதான இலக்குகள் எவை?
(04 புள்ளிகள்)

(c). பழம் பொருளியலாளர்களின் வேலை வாய்ப்புக் கோட்பாட்டைச் சுருக்கமாக தருக.
(12 புள்ளிகள்)

(மொத்தம்20 புள்ளிகள்)

2. (a). மூடப்பட்ட பொருளாதாரம், திறந்த பொருளாதாரம் ஆகிய இரண்டினையும் வேறுபடுத்திக் காட்டுக.
(04 புள்ளிகள்)

(b). இரு துறைகளை மட்டும் கொண்ட ஒரு எளிய பொருளாதாரத்தில் தேசிய வருமானத்தின் சமநிலை மட்டத்தை வரிப்படம் ஒன்றின் மூலம் காட்டுக.
(04 புள்ளிகள்)

(c). ஒரு மூடப்பட்ட பொருளாதாரத்தின் நுகர்வுத் தொழிற்பாடு கீழே தரப்படுகிறது.

$$C = 10 + 3/4Y$$

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

(I) இப் பொருளாதாரத்தின் சேமிப்புத் தொழிற்பாட்டைத் தருக.

(II) முதலீடானது 20 மில்லியனாக அமையும் போது தேசிய வருமானத்தின் சமநிலை மட்டத்தைக் காண்க.

(III) அரசாங்கம் 30 மில்லியன் ரூபாவை பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகளின் கொள்வனவுக்கு செலவிடுகிறது எனின் புதிய சமநிலை மட்டம் யாது?

(IV) அரசாங்கம் ஒரு சமனிலை வரவு செலவுத் திட்டத்தைப் பேண விரும்பி எல்லா வருமான மட்டங்களிலும் ஒரே அளவான வரி விதிப்பை அமுல் செய்கிறது. வரி விதிப்பின் பின்னர் தேசிய வருமானத்தின் புதிய சமநிலை மட்டம் எது?

(12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3. (a). "சார்பு வருமான கருதுகோளினை விளக்குவதற்கு சராசரி நுகர்வு நாட்டம் என்ற எண்ணக்கரு எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது? விளக்குக

(12 புள்ளிகள்)

(b). எதிர்கால வட்டி வீதம் பற்றிய நிச்சயமற்ற தன்மையானது எவ்வாறு பணத்திற்கான உத்தேச நோக்கக் கேள்வி மீது செல்வாக்குச் செலுத்துகின்றது? வரைபடத்துடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4. (a) " ஒரு பொருளாதாரத்தில் வட்டி வீதம், முதலின் எல்லைத்திறன் (MEC) என்பன தனியார் துறையினரின் முதலீட்டுத் தீர்மானத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன" விளக்குக.

(12 புள்ளிகள்)

(b) ஒரு பொருளாதாரத்தின் வேலையின்மை மட்டத்திற்கும் விலை மட்டத்திற்கும் இடையிலான தொடர்பு 'பிலிப்ஸ்' வளைகோட்பாட்டின் மூலம் எவ்வாறு காட்டப்படுகிறது?

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றைச் சுருக்கமாக விளக்குக.

(a) சென்மதி நிலுவைப் பற்றாக் குறையை சீர்ப்படுத்தல்

(b) வர்த்தக சகட்வோட்டம்

(c) இலங்கையின் நாணயக் கூட்டுக்கள் ( Monetary Aggregates)

(d) " மத்திய வங்கி – வங்கிகளின் வங்கி"

(மொத்தம் 20 புள்ளிகள்)

# # # # # # # # # # # # # # # # # # # # # # # # # # # #